## நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2017

நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலமைக்கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2007 யூலை 17 ஆந் திகதிய நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.
எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,035,148 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,258,944 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,294,091 ஆன வீழ்ச்சியொன்றாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக உட்கட்டமைப்பு பேணுகை செலவினம் ரூபா 12,148,112 இனால் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டின் நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகையான ஆரம்ப பாதீட்டு மதிப்பீடு மற்றும் அதற்குரிய செயல்நடவடிக்கை திட்டம் 2016 யூன் 06 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 19,689,000 ஆன திருத்திய பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரம் 2017 திசெம்பர் 29 ஆந் திகதியே கிடைத்திருந்தது. மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகளை நிறைவேற்றும் செயன்முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.1.2 செயற்பாடுகளும் மீளாய்வும்

மீளாய்வாண்டின் போது நீதிமன்ற வலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்பாட்டிற்காக மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்காக நீதிமன்ற நிர்வாக செலவினத் தலைப்பின் மூலம் ரூபா 130,000,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டு அதில் ரூபா 128,896,325 ஆன தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றை கையேற்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் நிதியப் பொறுப்பு உறுதியின் 1 (A) பிரிவின் பிரகாரம் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நீதி அமைச்சினால் நிதியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 10,000,000 தொகை மற்றும் நிதியத்தின் ஏனைய வருமானங்களை பயன்படுத்தி மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்காக மாத்திரம் ரூபா 15,723,208 செலவிடப்பட்டிருந்தது. எனினும் நிதியப் பொறுப்பு உறுதியின் 1(A) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டின் திருத்திய பாதீட்டின் பிரகாரம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட செலவினத்தின் கீழ் மூலதனச் சொத்துக்களை கையேற்றலில் 17 சதவழீதம் மற்றும் நிர்வாகச் செலவினத்தின் கீழ் 19 சதவீதம் சேமிப்புக்கள் காணப்பட்ட காரணத்தினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.